## தொடரும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அதிரடி ஆய்வு

## கூட்டுறவு சார் பதிவாளர் மற்றும் தனி அலுவலர் தற்காலிக பணி நீக்கம் மற்றும் துறை நடவடிக்கை

## நியாயவிலைக் கடை பணியாளர்கள் மற்றும் பகுதி அலுவலர் பணியிட மாற்றம் மற்றும் துறை நடவடிக்கை

தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று (06.10.2009) மேற்கொண்ட ஆய்வினை தொடர்ந்து மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (07.10.2009) காலை 9.00 மணிக்கு மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திருமதி. பூங்கோதை, சிறப்பு ஆய்வு குழுவினர்கள், அரசு உயர் அலுவலர்கள், ஆகியோர்களுடன் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நியாயவிலைக் கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மருதம்புத்தூர் என்ற குக்கிராமத்தில் வீடுவீடாக சென்று பொது மக்களை சந்தித்து பொது விநியோகத் திட்டப் பொருட்கள் அவர்களுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தார்கள். மேலும் அவர்களுடைய குடும்ப அட்டைகளை பெற்று அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள பதிவுகளை, புதுப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தால் நடத்தப்படும் மருதம்புத்தூர் நியாயவிலைக் கடையில் உள்ள ‘அ’ பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்து, வழங்கப்பட்டுள்ள பொருட்கள் குடும்ப அட்டையில் முறையாக பதியப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார்கள். மேலும், பொது மக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை முறையாக காட்சிப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். ஆய்வின் போது நியாயவிலைக் கடையில் வழங்கப்பட்ட அரிசி தரமில்லாமல் இருப்பதாக ஒரு பெண்மனி தெரிவித்ததை தொடர்ந்து அவருடைய வீட்டிற்கு சென்று வழங்கப்பட்ட அரிசியின் மாதிரியை பெற்று பார்த்ததில் நல்ல அரிசி தான் வழங்கப்பட்டுள்ளது என்பதை அனைவரும் அறியும் வண்ணம் உடன் வந்த பத்திரிகையாளர்களுக்கும், இதர பொது மக்களுக்கும் உறுதி படுத்தினார்கள்.

அடுத்ததாக புதுப்பட்டி கிராமத்தில் வீடுவீடாக சென்று பொது மக்களை சந்தித்து பொது விநியோகத் திட்டப் பொருட்கள் அவர்களுக்கு முறையாக வழங்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தார்கள். பொது விநியோகத் திட்டப் பொருட்கள் வழங்குவது மற்றும் விற்பனையாளர்களின் சேவையில் எதேனும் குறைபாடுகள் இருப்பின் உடனடியாக திருநெல்வேலி மாவட்ட வழங்கல் அலுவலருக்கு 9445000379 என்ற செல்பேசியிலும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 2501222 என்று தொலைபேசியிலும் புகார்களைத் தெரிவிக்கும்படி அறிவுறுத்தினார்கள். புதுப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் புதுப்பட்டி நியாயவிலைக் கடையை ஆய்வு செய்த போது அங்கிருந்த பொது மக்கள், தாய்க் கடையை வாரத்தில் 3 நாட்கள் தான் திறக்கிறார்கள் என்று புகார் தெரிவித்ததன் பேரில், இனிமேல் வாரத்திற்கு 4 நாட்கள் திறக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். நியாயவிலைக் கடையில் துவரம் பருப்பு, பாமாயில் போன்ற பொருட்களை இருப்பில் வைத்துக்கொண்டு அதனை பொதுமக்களுக்கு வழங்குவதில் காலதாமதம் செய்ததை கண்டித்ததுடன், செப்டம்பர் 2009 மாதத்திற்கான கோதுமையை நகர்வு செய்து பொது மக்களுக்கு வழங்காததை கண்காணிக்கத் தவறிய கூட்டுறவு சார் பதிவாளர் திரு. ஜெயகாந்தன் என்பவரை தற்காலிக பணி நீக்கம் செய்யவும் ஆணையிட்டார்கள்.

அடுத்தப்படியாக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் ஆலங்குளம் கிடங்கிற்கு சென்று ஏற்கனவே எடை சரி பார்த்து அடுக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகளை மறு எடை போட்டு பார்த்தார்கள்.

அடுத்து ஆலங்குளம் வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு சென்று வட்ட வழங்கல் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 'அ' பதிவேடு, புதிய குடும்ப அட்டை வழங்கல் பதிவேடு, ஒதுக்கீட்டு பதிவேடு போன்ற பதிவேடுகளையும், புதிய குடும்ப அட்டைகள் நிர்ணயிக்கப்பட்ட காலகெடுவிற்குள் வழங்கப்பட்டுள்ளதா, இலவச எரிவாயு இணைப்புகள் முறையாக பொது மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் இலவச எரிவாயு இணைப்பு வழங்கப்பட வேண்டும். எந்த ஒரு விலாசத்திலும் எல்லா தகுதியுடைய குடும்பத்தையும் விட்டு விடாமல் இலவச எரிவாயு இணைப்பினை வழங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

அடுத்து தென்காசி வட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலப்புலியூர் நியாயவிலைக் கடையை ஆய்வு செய்த போது, உடல் நலம் சரியில்லாத பொது மக்களுக்கு முறையாக சேவை செய்ய இயலாத விற்பனையாளர் திரு. மகாலிங்கம் என்பவரை பணி மாறுதல் செய்யவும், சிறப்புப் பொது விநியோகத் திட்ட பொருட்களை சரிவர வழங்காத தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பகுதி அலுவலர் திரு. ஏ. மணி என்பவரை பணி மாறுதல் செய்து அவர் மீது துறை நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணையிட்டார்கள்.

அடுத்து கடையநல்லூர் தீவலன்கால்வாய் பகுதியில் கடையநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு பண்டகசாலையால் நடத்தப்படும் மண்ணெண்ணெய் விற்பனை நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தில் 9,554 குடும்ப அட்டைகளுக்கும், 1,620 புதிய குடும்ப அட்டைகளுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணையும் வழங்கப்படுவதாக விசாரணையின்போது பொது மக்கள் தெரிவித்தார்கள். இக்கடையின் 'அ' பதிவேட்டை முழுமையாக சரிபார்த்து திருத்தங்கள் மேற்கொண்டு முறையான திருத்தப்பட்ட 'அ' பதிவேட்டை தயார் செய்ய மாவட்ட வருவாய் அலுவலருக்கு உத்தரவிட்டார்கள்.

அடுத்து, கடையநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் நியாயவிலைக் கடையில் ஆய்வுகள் மேற்கொண்டு, சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களை தேவையான அளவு இருப்பில் வைத்து குடும்ப அட்டைகளுக்கு வழங்காது இருப்பதை கண்டறிந்து, இதற்கு பொறுப்பான தென்காசி கூட்டுறவு விற்பனை சங்கத் தனி அலுவலர் திரு. முகைதீன் பாட்சா என்பவரையும், சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களை நியாயவிலைக் கடையில் போதுமான அளவில் இருப்பு வைக்காமல் பொது மக்களை அலைகழித்த விற்பனையாளர் திரு. எம். ஜெயபாலன் என்பவரையும் தற்காலிகப் பணிநீக்கம் செய்து துறை நடவடிக்கை எடுக்கவும் ஆணையிட்டார்கள். இப்பகுதி மக்களுக்கு தேவையான பச்சரிசியை இருப்பில் வைத்து வழங்கவேண்டுமென்றும் ஆணையிட்டார்கள்.

வீதி வீதியாக சென்று நியாயவிலைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வினை தொடர்ந்து மாலை 3.00 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் உணவுப் பொருள் வழங்கல் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்ப் பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தும் அலுவலர்களின் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் திருமதி. பூங்கோதை ஆகியோர்களும் பங்கு பெற்றார்கள்.

ஆய்வு கூட்டத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் நியாயவிலைக் கடைகளில் சர்க்கரை குடும்ப அட்டைகளுக்கு சர்க்கரையைத் தவிர இதர பொருட்கள் வழங்கப்படுவதில்லை என பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். சர்க்கரை குடும்ப அட்டைகளை பொறுத்தவரை அட்டைதாரர்கள் அரிசி நீங்கலாக சர்க்கரை, கோதுமை, மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, மைதா, கோதுமை மாவு, ரவா போன்ற அனைத்து பொருட்களும் பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

எனவே, சர்க்கரை குடும்ப அட்டை உள்ளவர்களுக்கு அரிசியைத் தவிர இதர அனைத்து பொருட்களும் வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். நியாய விலைக்கடைப் பணியாளர்கள் சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டும். தவறுகள் செய்யும் பணியாளர்களுக்கு கடுந்தண்டனை வழங்கப்படும். ஒவ்வொரு கடைக்கும் உரிய "அ" பதிவேடுகளை மாதம் ஒருமுறை முழுமையாக சரிபார்த்து திருத்தங்கள் மேற்கொண்டு கடையில் உள்ள "அ" பதிவேடுகளை சரி பார்த்து கடை மற்றும் வட்ட "அ" பதிவேடுகளில் கையொப்பம் இட்ட பின்னரே கடைகளுக்கு பொருள் ஒதுக்கீடுகள் வழங்கவேண்டும். இவ்வாறு செய்ய தவறும் வட்ட வழங்கல் அலுவலர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். வரும் தீபாவளி பண்டிகையைக் கருத்தில் கொண்டு நியாயவிலைக் கடைகளிலும், கிடங்குகளிலும் இருப்பு இல்லை என்ற நிலை இல்லாமல் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் கிடங்குகளில் இருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசி தரமானதாக இருக்கவேண்டும் அவ்வாறு இல்லை எனில் நியாயவிலைக் கடை பணியாளர்கள் உயர் அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து பொருட்களும் பொதுமக்களுக்கு வழங்கப் படுவதை மாவட்ட வழங்கல் அலுவலரும் மண்டல இணைப்பதிவாளர்களும் முனைப்புடன் கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 15.10.2009க்குள் பொது விநியோகத் திட்ட மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களை நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்ய வேண்டும் என்று மாவட்ட நிர்வாகத்திற்கு ஆணையிட்டார்கள். நல்ல தரமுடைய பொருட்கள் மட்டுமே மண்டல மேலாளர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பவேண்டும். கிடங்குகளிலிருந்து அனுப்பப்படும் பொருட்கள் தான் நியாயவிலை கடைகளில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை மண்டல மேலாளர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் தொடக்க உரையைத் தொடர்ந்து மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான் மற்றும் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திருமதி பூங்கோதை ஆகியோர்கள், பொது விநியோகத் திட்டத்தினை பொது மக்கள் திருப்தி அடையும் வகையில் செயல்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். அதன் பிறகு மாவட்ட வழங்கல் அலுவலர், மண்டல இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ஆகியோர்களின் செயல்பாட்டினை தனித்தனியாக ஆய்வு செய்து விரைவாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட அறிவுரை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, திரு. க. ராஜாராமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. எம். ஜெயராமன், இ.ஆ.ப., திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர், திரு. கருப்பசாமி பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9